


ஈரோடு மாவட்ட அனைத்து இஸ்லாமிய சமுதாய கூட்டமைப்பின் சார்பில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமியிடம் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர்மைதீன் ஆதரவு தெரிவித்தார். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு உள்ளிட்ட முஸ்லிம் லீக் கட்சியின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் - கழக வேட்பாளரை ஆதரித்து

# ஈரோடு கிழக்கு தொகுதியில் இரா.முத்தரசன் வாக்குச் சேகரித்தார்!

ஈரோடு, ஜன. 31-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன், கோட்டை பகுதியில் வீதி, வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

வாக்கு சேகரிப்பில் கழக மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப. சச்சிதானந்தம், குறிஞ்சி என். சிவகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி, க.சின்னையன், டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்ர மணியம் மேயர் நாகரத்தினம், பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம், மாமன்ற உறுப்பினர்கள் ஜெயந்தி ராமச்சந்திரன், புவனேஸ்வரி, பாலசுந்தரம், ந.செந்தில்குமார், ரவி, அந்தியூர் இரா.நித்தின், என்.ஏ.அய்யூப் அலி, இமயம் சிவக்குமார் உள்ளிட்ட பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

### கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில் பணிபுரியும்

# பணியாளர்களுக்கு பணிப் பதவி உயர்வினை வழங்கிட வேண்டும்!

### தமிழ்நாடு மாநில நுகர்வோர் மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜன. 31 -

தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் மற்றும் இணைப்புச் சங்க நிர்வாகி களின் கூட்டம் 27.01.2025அன்று காலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை அலுவலகமான "கலைஞரகத்தில்" நடைபெற்றது.

மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையிலும், மாநிலப் பொருளாளர் பொன்னி, இரா. பழனியப்பன், மாநில துணைத் தலைவர் டாக்டர் சிந்தாமணி இரா.இராஜன் ஆகியோர் முன்னிலையிலும் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் , தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் , பேரவை துணைத் தலைவர் இரா.பொன்னுராம் , அலுவலகச் செயலாளர் ஆ.சீ. அருணகிரி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக் கூட்டத்திற்கு வருகை தருவோரை இச்சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டி.யு.சி.எஸ்.பத்மநாபன் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச. நிர்வாகிகள் T இராஜன் சாமிநாதன், திருவாரூர் டி.காளிதாஸ், மதுரை R.பாண்டியன் மணி, சேலம் பொன்னி சதீஷ்குமார், வேலூர் மாவட்டம் எம். ஏழுமலை, திருவண்ணாமலை பாண்டியன், காஞ்சிபுரம் க.செல்வமணி, திருவள்ளூர் ஜோதி, திருச்சி சிந்தாமணி இராஜேந்திரன், பொள்ளாச்சி இரத்தின சாமி, சிவகங்கை கூநாகராசன், திருநெல்வேலி முத்தையா, திண்டுக்கல் அபிராமி சி.மனோகரன், சென்னை சிந்தாமணி ஜெ.அலிசன், கும்பகோணம் சந்திரசேகரபுரம் ஆர்.கோபிநாத், தஞ்சாவூர் ஏ விஸ்வநாதன், ஈரோடு எம். சங்கரன், கரூர் ஆர். குமார் மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகி களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்த்துக்களுடன் தமிழ்நாட்டில் உலகமே வியக்கும் வண்ணம், திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இக்கூட்டத்தில் வாழ்த்துவதுடன், மீண்டும் 2026 சட்டமன்றத் தேர்தலில், திராவிட மாடல் ஆட்சி அமைய பாடுபடுவோம் என உறுதி மேற்கொள்கிறோம்.

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில் பணிபுசியும் பணியாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31.3.2025உடன் முடிவடைய உள்ள நிலையில் தற்போதைய காலமாற்றத்திற்கு ஏற்றாற்போல் 14.2025 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்க கோரி கோரிக்கைகள் தயார் செய்து, கூட்டுறவுத் துறை அமைச்சர், கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு பாதுகாப்புத் துறை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆகியவர்களிடம் கொடுத்து, கோரிக்கைகளை நிறைவேற்றி தரக்கோரி மாநில சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் மாநில நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறோம்.

பண்டக சாலை பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள 3 சதவிகித வித்தியாச அகவிலைப்படியினை வழங்கிட பதிவாளர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்ளப்படுகிறது. கூட்டுறவு பண்டக சாலை ஊழியர்கள், பணி ஓய்வு பெறும் நாளிலேயே ஈட்டிய விடுப்பிற்கான நிதிப் பயனை வழங்கிட கோருகிறோம்.

நுகர்வோர் கூட்டுறவு பண்டக சலைகள் நடத்திடும் மருந்தகங்களுக்கு ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட, ஆண்டுதோறும் மானியமாக ரூ. 5 லட்சம் வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள பணிப் பதலி உயர்வினை உடனடியாக வழங்கிட ஆவண செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் போது காலியாக உள்ள பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அமைப்பின் மூலம் புதிய பணியாளர்களை, தேர்வு செய்து உடனடியாக நிரப்பிட கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கும்பகோணத்தில் - அ.தி.மு.க. அரசு தொடர்ந்த பொய் வழக்கிலிருந்து

# தி.மு.கழக எம்.பி. - எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகள் விடுதலை!

### தஞ்சை சிறப்பு நீதிமன்றம் உத்தரவு!

தஞ்சாவூர் ஜன.31.

2018 ஆம் ஆண்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவும், காவிரி நீர் உரிமைக்காகவும், அரசு பேருந்து கட்டணத்தை உயர்த்தியதை எதிர்த்தும் அப்போதைய அ.தி.மு.க அரசையும், பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசையும் கண்டித்து நடைபெற்ற மக்கள் நல போராட்டத்தில் கழக நிர்வாகிகள் மீது தொடரப்பட்ட பொய் வழக்குகளிலிருந்து தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம், துணை மேயர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகளை தஞ்சை சிறப்பு நீதிமன்றம் விடுவித்து தீர்ப்பளித்தது.

கடந்த 05.04.2018 அன்று உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கும்பகோணத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் தஞ்சை வடக்கு மாவட்ட தலைவர் டி.ஆர்.லோகநாதன், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப. தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, மாநகர பொருளாளர் எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட 156 நபர்கள் மீது பல்வேறு பொய் வழக்கு தொடரப்பட்டது.

அதற்கு முன்பாக 28.01.2018 அன்று காவிரி டெல்டா பகுதிகளில் தண்ணீர் இன்றி கருகும் சம்பா பயிர்களை காக்க காவிரி தண்ணீரை கர்நாடக அரசிடமிருந்து பெற்றுதரக்கோரி மாநில, ஒன்றிய அரசை வலியுறுத்தி கும்பகோணம் இரயில் நிலையத்தில் பொதுமக்களுடன் போராட்டம் நடத்திய போது மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் செல்வராஜ், ராஜாராமன், எஸ்.ரவிச்சந்திரன், சோடா கிருஷ்ணமூர்த்தி, குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, சூரியகுமார், எஸ். வாசுதேவன் , விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தமிழினி, ஆகியோர் மீது பொய் வழக்குகளை பதிந்து கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

29.01.2018 அன்று அப்போதைய அ.தி.மு.க அரசின் அரசு பேருந்துக் கட்டண கொள்ளையை எதிர்த்து கும்பகோணம் – தஞ்சை சாலையில் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் பொதுமக்களுடன் இணைந்து சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில்கலந்து கொண்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 178 நபர்கள் மீது உண்மைக்குப் புறப்பான பொய் வழக்குகளை பதிந்து கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

மேற்கண்ட வழக்குகள் அனைத்தும் கும்பகோணம் நீதிமன்றத்திலிருந்து தஞ்சையில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நீதியரசர் எஸ்.சுசிலா தொடர் விசாரணை செய்து அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்து மக்கள் நலனுக்காக போராடியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளில் குற்றச்சாட்டு அரசு தரப்பிலிருந்து நிரூபணம் ஆகாததால் மேற்கண்ட வழக்குகளில் தொடர்புடைய அனைவரையும் வழக்கிலிருந்து விடுவித்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் கழகத்தின் சார்பில் கழக மூத்த வழக்கறிஞர் எஸ். ஜெயசந்திரன், தஞ்சை மாநகர வழக்கறிஞர் அணி தலைவர் ராமசாமி அன்பழகன், கழக வழக்கறிஞர் ஜெ.ராஜலெட்சுமி ஆகியோர் கழக நிர்வாகிகளுக்காக ஆஜரானார்கள்.




மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் மன்னம்பந்தலில் மொழிப்போர்த் தியாகிகள் நினைவு தினைத்தை முன்னிட்டு அமைதி ஊர்வலம் மற்றும் மொழிப்போர்த் தியாகி சாரங்கம்பாணி நினைவு தூணில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, தலைமையில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.முருகமணி, பி.எம்.அன்பழகன், மங்கை எம்.சங்கர், செல்லசேது.ரவிக்குமார், அமிர்த.விஜயக்குமார், கு.வைத்தியநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் ஆளுநரின் தொடர் சட்ட விரோதச் செயல்களுக்கு, தமிழ்நாட்டு மக்கள் உரிய தண்டனையை நிச்சயம் வழங்குவார்கள்!



**பொன். முத்துராமலிங்கம்**

முன்னாள் அமைச்சர், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

இராஷ்ட்ரிய சுயம்சேவக் சங் (RSS) அமைப்பின் தலைவர் மோகன்பகாவத் குடியரசு தினத்தன்று மராட்டிய மாநிலம் தானே மாவட்டத்தில், விவாண்டியிலுள்ள கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றும் பொழுது, வேற்றுமை என்பது இந்தியாவில் இயற்கையானதுதான். எனவே, இயல்பாகவும், இயற்கையாகவும் அமைந்துள்ள வேற்றுமைகள் மதிக்கப்பட வேண்டுமென தெரிவித்திருக்கிறார்! இந்திய துணைக் கண்டத்தின் ஒற்றுமை என்பது மறைந்த முன்னாள் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் "வேற்றுமையில் ஒற்றுமை" என்றுதான் குறிப்பிட்டார். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய பாபா சாகிப் அம்பேத்கார் அவர்களும் "வேற்றுமையில் ஒற்றுமை" என்றக் கருத்தை அடித்தளமாக வைத்துதான் இந்திய அரசியல் சட்டத்தை (Constitution of India) உருவாக்கினார்கள்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டை அடித்தளமாக வைத்துதான் இங்கு வாழும் பல்வேறு தேசிய இனங்களின் தனித்தன்மைகளை பாதுகாக்கின்ற அடிப்படையில் குறிப்பாக, சமூக பொருளாதார அரசியல் அடிப்படையில் சமத்துவத்தை உருவாக்கி, அத்தகைய சமத்துவ சூழ்நிலைகள் எத்தகைய காலசூழ்நிலை மாற்றங்கள் வந்தாலும், கிஞ்சிற்றும் உருக்குலைந்து விடாமல், நிரந்தரமாக பாதுகாத்திடும் வகையில் அரசியல் சட்டத்தை கட்டமைத்தார்கள். இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிதான் இந்திய நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கு வாக்குறுதிகளாக வழங்கியிருப்பதுதான் அரசியல் சட்டத்தினுடைய முன்னுரை யாகும் (Preamble of the constitution). இந்திய ஒன்றிய நிலப்பரப்பு முழுவதும் பரவி வாழும் மொழி, இனம், மதம், பண்பாடு ஆகியவற்றால் வேறுபட்ட மக்களுக்கு சரிநிகர் சமமான சமூக பொருளாதார அரசியல் நீதி வழங்கப்படும் என்றும், (Justice, social, economic and political), சுதந்திரமாக எண்ணுவதற்கும், எண்ணித் தேர்ந்தக் கருத்துக்களை வெளியிடுவதற்கும், தனிமனித நம்பிக்கைகளுக்கும், அந்த நம்பிக்கை களின் அடிப்படையிலான வழிபாடுகளுக்கும் தடையற்ற சுதந்திரம் உண்டு எனவும், இங்கு வாழும் அனைத்து குடிமக்களும் சமமாக கருதப்படுவதோடு, சமவாய்ப்பும் வழங்கப்படும் என்றும், அவர்களிடையே சகோதரத்துவத்தையும், அவர்களின் சுயமரியாதையையும் பாதுகாக்கப்படும் என்பதோடு, இங்கு வாழும் குடிமக்களின் ஒற்றுமையையும், நாட்டின் ஒற்றுமையையும் உறுதி செய்யப்படும் என்றும் தீர்க்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதிகளை உள்ளடக்கிய இந்திய அரசியல் சட்டம் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதி நாட்டுக்கு பிரகடனப்படுத்தி, 1950 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாள் அமல்படுத்தப்பட்டது. இந்திய அரசியல் சட்டம் அமல்படுத்தப்பட்டு 76 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இந்திய அரசியல் சட்டத்தினுடைய அடிப்படைகளை படிப்படியாக தகர்க்கும் நோக்கில் 2014ஆம் ஆண்டு பாரதிய ஜனதாக் கட்சியினுடைய ஆட்சி தொடங்கிய காலம்தொடங்கி, திட்டமிட்டு சட்டங்களும், திட்டங்களும் உருவாக்கப்படுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள மதசார்பற்ற சமதர்ம கோட்பாட்டை (Socialist Secular) ஒன்றிய அரசு அங்கீகரிப்பதாக தெரியவில்லை. மாறாக, "இந்துத்துவாக்" கோட்பாட்டின் அடிப்படையிலான "இந்துராஷ்ட்ரத்தை" உருவாக்க இருக்கிறோம் என்று அதிகாரப்பூர்வமாகவே பிரகடனப்படுத்தி, அதற்கான உள்கட்டமைப்புகளை வெளிப்படையாகவும், திரைமறைவிலும், நாடாளுமன்றத்தில் தங்களுக்கான எண்ணிக்கை பலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். "இந்துத்துவாக்" கோட்பாட்டின் அடிப்படையிலான "இந்துராஷ்டிரத்தை" நிர்மாணிப்பதற்கான தொடக்கமாக "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற முழக்கத்தை முன்வைத்து, இதற்கு ஏதுவான அறிக்கையையும் ஒரு குழுவின் மூலம் பெற்றிருக்கிறார்கள்.

ஒரே காலகட்டத்தில் நாடாளுமன்றங்களுக்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தல்கள் என்பது நடைமுறை சாத்தியமற்றது என்று எதிர்க்கட்சியினரும், அரசியல் ஆய்வாளர்களும் தங்களின் ஆணித்தனமான கருத்துகளை முன்வைத்தாலும், இந்தக் கருத்துக்களைப் பற்றி ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சி அரசு கிஞ்சிற்றும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற வழிமுறையைப் பின்பற்றி நாடாளுமன்ற ஜனநாயக முறையிலிருந்து, ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாறுவதற்கான அறிகுறிகள்தான் பிரகாசமாகத் தெரிகிறது. ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாறிவிட்டால், "இந்துத்துவாக்" கோட்பாட்டின் அடிப்படையில் "இந்துராஷ்டிரத்தை" எளிதில் உருவாக்கிடலாம் என்பது ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சி அரசின் திட்டமாகும். இந்துத்துவாக் கோட்பாடு என்பது வேதகால மனுதர்மக் கோட்பாடுகளோடு இன்றைய கால மாற்றத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, தடைகளைச் சமரசம் செய்யும் நோக்கில் கார்ப்பரேட்டுகளுடன் பயணப்படவிருக்கும் கோட்பாடுதான் இன்றைய இந்துத்துவமாகும். ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் இன்றைய ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, இராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் (RSS) அமைப்பின் ஆலோசனைப்படி, இந்தியாவை இந்துராஷ்ட்ரமாக மாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதாக் கட்சியும், அந்தக் கட்சியின் "ராஜகுருவான" ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் மேற்கொண்டிருக்கும் இந்த திட்டத்திற்கு தடையாக இருப்பது இந்திய அரசியல் சட்டம் (Constitution of India). இந்திய அரசியல் சட்டத்தையும் காலப்போக்கில் நீர்த்துப்போகக்கூடிய திரைமறைவு நடவடிக்கைகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டுச் செய்துவருகிறது. இந்த நடவடிக்கை மட்டுமல்ல, எதிர்க் கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அந்தந்த மாநில ஆளுநர்கள் மூலமாக எதிர்க்கட்சிகளின் அரசுகளுக்கு எல்லையற்ற தடைகளையும், சங்கடங்களையும் தொடர்ந்து செய்துகொண்டு இருக் கிறார்கள். இதற்கு இடையில் ஆளுநர்கள் மாநில அரசுகளின் அதிகாரங்களை ஆக்கிரமிப்பு செய்கின்ற முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தில் மாநிலங்களின் ஆளுநருக்கான அதிகாரங்கள் 152வது பிரிவிலிருந்து, 164வது பிரிவு வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த பிரிவுகளின் சரத்துக்கள்படி ஆளுநர்களின் பணி அமையாமல், தன்னிச்சையாக மாநில அரசுகளின் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களில் தலையிட்டு குழப்பங்களைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டினுடைய ஆளுநர் இந்திய அரசியல் சட்டப்படியான அதிகாரங்களைப் பற்றி கவலைப்படாமல், ஆளுநர் மாளிகையில் இருந்து கொண்டு, தன் விருப்பப்படி ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் குடியரசு தினத்தன்று, அதனைத் தொடர்ந்து சகஜாநந்தாவின் 135ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுது அவர் பேசிய பேச்சுகள் 26.01.2025 ஆம் நாள் தினமலர் நாளிதழில் பக்கம் 12ல், இந்து தமிழ் திசை நாளிதழில் பக்கம் 9ல் பிரசுரமாகி யிருக்கிறது.

அவர் பேசியதாக வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்கள் மதசார்பற்ற இந்திய அரசியல் சட்டப்படி ஆட்சி நடைபெறும் நாட்டிற்கு எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. அது மட்டுமல்ல, சாதி, இன வேற்றுமைகளை உருவாக்கும் கருத்துகளை இந்த நிகழ்ச்சிகளில் பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார். ஒரு மாநிலத்தில் ஆளுநராகப் பொறுப்பேற்கும் பொழுது இந்திய அரசியல் சட்டம் 159வது பிரிவின்படி உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உறுதி மொழியை எடுத்துக்கொண்டு ஆளுநராகப் பொறுப்பேற்ற ஆளுநர் ரவியினுடைய இந்தக் கருத்துகள் முற்றிலும் முரண்பட்டதாகவே இருக்கிறது. ஆளுநர் ரவியினுடைய நோக்கமும், செயலும் தமிழ்நாடு அரசினுடைய செயல் திட்டங்களையும், மக்களுக்கான பணிகளையும் சீர்குலைப்பதாகவே உள்ளது என்பதை அவருடைய சிதம்பரம் உரை நிரூபித்துக் காட்டுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய தலைவர் மோகன்பகாவத் இந்தியாவில் வேற்றுமைகள் இருப்பது இயல்பானதும், இயற்கையானதும் தான் என்ற கருத்து ஆளுநருடைய செயல்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கிறது.

தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட முரண்பட்ட சூழ்நிலைகளை மக்களுக்கு புரிய வைக்கும் ஒரு முதுமொழி வழக்கத்தில் உள்ளது. அந்த முதுமொழிதான் "படிக்கிறது இராமாயணம், இடிக்கிறது பெருமாள் கோயில்" என்பதாகும். ஆர்.எஸ்.எஸ். தலைவர் நாட்டு மக்களுக்கு இராமாயணத்தைப் படித்து காட்டுகிறார், ஆளுநர் ரவி பெருமாள் கோவிலை தமிழ்நாட்டில் இடித்துக் காட்டுகிறார் என்று தான் கருத முடிகிறது. எனவே, இந்த முதுமொழிக்கு ஏற்ப "சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் இருப்பதுதான்" ஒன்றிய பா.ஜ.க.வின் ஆட்சி என்பதை மோகன் பகாவத் பேச்சும், ஆளுநர் ரவினுடைய செயல்பாடும் உரிய எடுத்துக்காட்டுகளாக அமைகிறது.

எனவே, எதிர்காலத்தில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கான எச்சரிக்கைதான் இவர்களுடைய பேச்சும், செயலுமாகும்!



ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி கொடுமுடி ஒன்றியத்தில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் கட்டுவதற்கு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.